Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 12 | செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :113 பங்குனி 08ஆம் நாள் சனிக்கிழமை 21 மார்ச் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## பலாலி, கொடிகாமம், இரணைமடு, கேப்பாபிலவு

# வடக்கில் நான்கு இடங்களில் தனிமைப்படுத்தல் மையங்கள்

### விமானப்படை, ராணுவம் முன்னெடுப்பு சிவில் அதிகாரிகளுக்கு எதுவும் தெரியாது

யாழ்ப்பாணம், மார்ச் 21

வெளிநாடுகளிலிருந்து வருவோரை தனிமைப்படுத்தி வைத்திருப்பதற்கான மையங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தின் பலாலி, கொடிகாமம், கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடு,முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாப்பிலவு ஆகிய இடங்களில் நேற்று முதல் அவசர அவசரமாக அமைக்கப்பட்டு வருகின்றன. 02





## கடைகளை மூடுவித்த பொலிஸார்

*யாழ்ப்பாணம், மார்ச் 21*

*நாடு முழுவதும் நேற்று மாலை 6 மணியிலிருந்து நாளை மறுதினம் திங்கட் கிழமை காலை 6 மணி வரையில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் யாழ்ப்பாண நகரில் சில வர்த்தக நிலையங்கள் நேற்று மாலை 6 மணியின் பின்னரும் திறக்கப்பட்டிருப்பதை அவதானித்த பொலிஸார் அதனை மூடுவித்தனர். (ஒ,5,111)*

## கொள்ளை விலையில் 'மாஸ்க்' விற்பனை

யாழ்ப்பாணம், மார்ச் 21

கொரோனா வைரஸ் ஆபத்திலிருந்து பாதுகாக்க சகலரும் முகக் கவசங்கள் (மாஸ்க்) அணியத் தொடங்கியதை அடுத்து அதற்கு நாடு முழுவதும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. அரசு அதற்கு நிர்ணய விலை அறிவித்திருந்தாலும், கூடிய விலையில் விற்கப்பட்டு வந்தன. 02

## சடலம் தகனம் செய்ய காலக்கெடு

சாவகச்சேரி, மார்ச் 21

மரணம் சம்பவித்தால், குறிப்பிட்ட நேரத்துக்குள் சடலம் வெளியே கொண்டு செல்லப்பட்டு தகனம் செய்யப்படல் வேண்டும் என்று சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

அதேவேளை அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் பதனிடல் ( எம்பாமிங்) செய்வது சுகாதாரப் பகுதியினரால் தடை செய்யப்பட்டுள்ளது. 02

# ஊரடங்கு தொடருமா? ஞாயிறு மாலை முடிவு

### *அரசு அறிவிப்பு*

கொழும்பு, மார்ச் 21

நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 6 மணிக்கு ஊரடங்கு சட்டம் நீக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் அதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நாளை ஞாயிற்றுக்கிழமை மக்களுக்கு அறிவிக்கப்படும் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸை கட்டுப்படுத்தும் மற்றுமொரு நடவடிக்கையாக சுற்றுப் பயணங்கள், யாத்திரைகளை முற்றாக தடை செய்யத் தீர்மானித்துள்ளதாகவும் செயலகம் குறிப்பிட்டுள்ளது. 02

## ஊரடங்கை மீறிய 20 பேர் கைது

கொழும்பு, மார்ச் 21

புத்தளம், நீர்கொழும்பு மற்றும் கொச்சிக்கடை பகுதிகளில் ஊரடங்குச் சட்டத்தை மீறி செயற்பட்ட 20 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப் 02

## கொரோனா 72 பேருக்கு தொற்று

கொழும்பு, மார்ச் 21

கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் வேகமாகப் பரவி வருகின்ற நிலையில், இலங்கையில் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 72 ஆக அதிகரித்துள்ளது. 12 பேர் கொரோனா தொற்றால் நேற்று மாத்திரம் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தத் தகவலை அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு இறுதியாக வெளியிட்டுள்ள அறிக்கையில் உறுதிப்படுத்தியுள்ளது. 02

## எச்சரிக்கை!

கொழும்பு, மார்ச் 21

ஊரடங்கு வேளையில் வாகனங்களில் நடமாடுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. 02

## புகைத்தலுக்கு தற்காலிக தடை

### அரசிடம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 21

புகைபிடித்தல் மற்றும் மதுபாவனையால் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரிக்கும் சாத்தியம் இருப்பதால் புகைப்பிடித்தலை தற்காலிகமாக தடை செய்தும் மதுபானசாலைகளை தற்காலிகமாக மூடிவிடவும் நடவடிக்கை எடுக்குமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஒ,5)

*முச்சந்தி முரளி*



"கோத்தா சொல்லியே ரின்மீன் விலையைக் குறைக்காதவை பொலிஸ் சொன்னாத்தான் கேட்பினம் போல..."



## சவுக்கு காட்டில் தீ

வடமராட்சி,மார்ச் 21

வடமராட்சிக் கிழக்கு மணல்காட்டில் உள்ள சவுக்கு மரக் காட்டுக்கு விசமிகளால் நேற்றுத் தீ வைக்கப்பட்டுள்ளது.

தீயால் காடுகள் எரிந்து 02

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்





உதயன்
newuthayan.com

# இன்றைய ராசிபலன்

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாகும். சகோதரர்கள் வழியில் செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**இடபம்:** கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். குடும்பம் அல்லது வேலை தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்..

**மிதுனம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயல்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும்.

**கடகம்:** வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். சுகங்களும், சந்தோஷங்களும் அதிகரிக்கும். குடும்பபொறுப்புகள்கூடும்.செய்யும். பணியாளர்களுக்கு பாராட்டு கிடைக்கும்.

**சிம்மம்:** வரவும் செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையின் தேவையை நிறைவேற்றி மகிழும் வாய்ப்பு உண்டாகும். சிலருக்குஎதிர்பாராத பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு.

**கன்னி:** சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களை அரவணைத்துச் செல்வது அவசியம். முடிந்தவரை அவர்களின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்யவும்.

**துலாம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமை அவசியம். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** தாய்வழி உறவுகளால் நன்மை ஏற்படும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** உற்சாகமான நாள். மனஉறுதியுடன் செயல்படுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சகோதரர்கள் உங்களுடைய யோசனையை ஏற்றுக்கொள்வார்கள். பொறுமை அவசியம்.

**மகரம்:** புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். பிள்ளைகளால் செலவுகள் ஏற்பட்டாலும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். சிலருக்கு தாய்மாமன் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தாயின் விருப்பத்தை பூர்த்தி செய்வீர்கள். ஆனால், உடல்நலனில் கவனம் தேவை.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கிடைப்பதால், செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள்.

# வவுனியாவில் கொரோனா சந்தேகநபர்

வவுனியா, மார்ச் 21

வவுனியா செட்டிக்குளம் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் வவுனியா மருத்துவமனையில் நேற்றுக் காலை சேர்க்கப்பட்டுள்ளார். வெளிநாட்டிலிருந்து இலங்கை வந்தவர்களுடன் தொடர்புகளைப் பேணியதன் காரணத்தால் சந்தேகத்தில் செட்டிக்குளம் மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். அங்கிருந்து நோயாளர் காவு வண்டி மூலம் வவுனியா பொது மருத்துவமனையின் தொற்றுநோய் பிரிவில் சேர்க்கப்பட்டார். அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவரின் குருதி மாதிரிகளைப் பெற்று அனுராதபுரம் மருத்துவமனைக்கு மேலதிக பரிசோதனைக்களுக்காக அனுப்பிவைத்துள்ளனர். (ஒ,5,110)

*ஊரடங்கு..*

இதுதொடர்பில் ஜனாதிபதி செயலகம் அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் உருவாகியுள்ள நிலைமைகளுக்கு மத்தியில் மக்களை பாதுகாக்கும் வகையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மக்கள் நடமாடும் இடங்களில் சுமார் ஒரு மீற்றர் தூரத்தில் தனிநபர் இடைவெளியை பேணுமாறு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை கட்டாயம் பேணுமாறு அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

பேருந்து மற்றும் தொடருந்து சேவை நடைமுறையில் உள்ள சந்தர்ப்பங்களில் இந்த நடைமுறையை பின்பற்றுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. சமூக இடைவெளியை பேணுவதற்காக பேருந்துகளும் தொடருந்துகளும் பயணிகள் பயணம் செய்வதற்கான எண்ணிக்கையில் அரைவாசி எண்ணிக்கையானோர் மட்டுமே பயணிக்க முடியும். அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் ஏனைய பொருள்களை சதொச கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் உள்ளிட்ட விற்பனை நிலையங்களுக்கு போதுமானளவு அரசு விநியோகித்துள்ளது. மக்கள் அசௌகரியத்திற்குள்ளாகாத வகையில் அவற்றை விநியோகிக்குமாறு அந்த விற்பனை நிலையங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றுள்ளது.

(ஒ,5)

*கொள்ளை...*

யாழ்ப்பாண நகரில் நேற்று மாலை 4 மணியளவில் வீதியோரங்களில் வைத்து முகக் கவசங்கள் விற்பனை செய்யப்பட்டன. 10 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட முகக் கவசங்கள் 300 ரூபா வரையில் விற்கப்பட்டது.

(ஒ,5)

*சடலம்...*

மரண வீட்டில் நெருங்கிய உறவினர்கள் மட்டும் பங்குபற்ற முடியும். அங்கு கட்டிப் பிடித்து அழுவது, கைகொடுத்து அனுதாபம் தெரிவிப்பது போன்றவை மேற்கொள்ளக் கூடாது. மரண வீட்டில் கலந்து கொள்பவர்கள் அதிக நேரம் அங்கு நிற்கக்கூடாது. மரணம் சம்பவித்தால், அந்தப் பகுதி கிராம அலுவலர் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் போன்றோருக்கு அறிவித்து அவர்களின் ஆலோசனைக் பிரகாரம், செயற்படுமாறும் அறிவித்துள்ளனர். (க-9)

*சவுக்கு..*

நாசமாவதை அவதானித்த கிராம மக்கள் கிராம உத்தியோகத்தர் ஊடாக உடனடியாக பிரதேச செயலாளருக்கு அறிவித்தனர்.

முற்பகல் 11 மணியளவில் தீ வைக்கப்பட்டுள்ளது. பிரதேச செயலாளர் உடனடியாக இராணுவத்தினருக்கு தகவல் வழங்கினார். இராணுவத்தினரின் உதவியுடன், பிற்பகல் ஒரு மணியளவில் முற்றுமுழு தாக தீ கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது.

மீண்டும் காட்டுத்தீ பிற்பகல் 2 மணியளவில் பற்றிக்கொண்டது. பருத்தித்துறைப் பிரதேச சபைத் தவிசாளர் ஊடாக பிரதேச செயலருடன் தொடர்புகொண்டு தீ அணைக்கும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.

மாலை 6 மணியளவில் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இந்தத் தீயால் சுமார் 3 ஏக்கர் சவுக்கங்காடு அழிந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

தீப்பற்றல் துரிதமாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதால், வடமராட்சிப் பிரதேசத்துக்கு நீர் வழங்கும் இரண்டு நீர் பம்பி ஆழ் துளை கிணறுகள் பாதுகாக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-160)

*எச்சரிக்கை...*

அத்தியாவசிய சேவைகள், ஊடகவியலாளர்கள், மருத்துவ சேவையாளர்கள் மற்றும் வெளிநாடுகளுக்குப் பயணமாவதற்கு விமான நிலையத்துக்குப் பயணிப்போர் வீதிகளில் பயணிக்க அனுமதிக்கப்படுவர். வெளிநாடு பயணமாவோர் நுழைவு விசைவு மற்றும் கடவுச்சீட்டு என்பன காண்பிக்கவேண்டும். ஏனையோர் வாகனத்தில் பயணித்தால் வாகனம் பொலிஸாரால் கையகப்படுத்தப்படும். அந்த வாகனத்தின் உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும், என்று பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

(ஒ,5)

*ஊரடங்கை...*

ப்பட்டுள்ளனர். இவர்களில் 3 பெண்கள் மற்றும் 3 சிறுவர்களும் உள்ளடங்குகின்றனர்.

கொரோனா வைரஸ் பரவுவதை இல்லாதொழிக்க அரசு பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் நிலையில், நாட்டின் மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையிலும், குறித்த சட்டத்தை மீறுவோரை கைது செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி 20 பேரும் கடற்படையினராலேயே கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் புத்தளத்திலிருந்து கடற்பரப்பின் ஊடாக மன்னாருக்குச் செல்ல முற்பட்ட நிலையிலேயே கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஒ,5)

*கொரோனா...*

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் 218 பேர் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளனர் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளானவர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்காக நேற்றிலிருந்து வெலிகந்த மற்றும் முல்லேரியா மருத்துவமனைகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த மருத்துவமனைகளில் தேவையான வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதனிடையே, கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக கொழும்பு அங்கொடை தேசிய தொற்று நோயியல் மருத்துவமனையில் விமானப்படையினரால் மற்றுமொரு விடுதி அமைக்கப்பட்டு வருகின்றது. (ஒ,5,22)

*வடக்கில்...*

கொடிகாமத்தில் இராணுவத்தினரும், ஏனைய இடங்களில் விமானப் படையினரும் இதனை அமைக்கும் பணியை முன்னெடுத்துள்ளனர். இருப்பினும் இது தொடர்பான தகவல்கள், மாவட்டச் செயலர்களுக்கோ, வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தினருக்கோ தெரியப்படுத்தப்படவில்லை.

நாடு முழுவதும் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருகின்றது. இதனைக் கட்டுப்படுத்துவதற்காக நாடு முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்க ப்பட்டுள்ளது. வெளிநாடுகளிலிருந்து வருவோரை 14 நாள்கள் தனிமைப்படுத்திக் கண்காணிக்கவும் தனிமைப்படுத்தல் மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு, கந்தக்காடு ஆகிய இடங்களில் ஏற்கனவே தனிமைப்படுத்தல் மையங்கள் செயற்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் வவுனியா பம்மைமடு பெண்கள் இராணுவ முகாமில் கடந்த வாரம் தனிமைப்படுத்தல் மையம் அமைக்கப்பட்டது. வடக்கில் தற்போது மேலும் பல தனிமைப்படுத்தல் மையங்கள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கொடிகாமத்தில் அமைந்துள்ள இராணுவ முகாமினுள் தனிமைப்படுத்தல் மையம் அமைக்கப்படுகின்றது. அதேபோன்று பலாலியில் விமானப் படை முகாமுடன் இணைந்த பிரதேசத்தில் தனிமைப்படுத்தல் மையம் அமைக்கப்படுகின்றது.

கிளிநொச்சி இரணைமடுவில் அமைந்துள்ள இராணுவம் முகாம் பகுதிக்குள்ளும், முல்லைத்தீவு கேப்பாப்பிலவு விமானப் படை முகாம் பகுதிக்குளம் தனிமைப்படுத்தல் மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

தனிமைப்படுத்தும் மையங்கள் அமைக்கப்படுவது தொடர்பில் அந்தந்த மாவட்டச் செயலர்களுக்கோ, வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தினருக்கோ எந்தவொரு தகவலும் தெரியப்படுத்தப்படவில்லை. பாதுகாப்புத் தரப்பினரே அதனை முன்னெடுத்து வருகின்றனர்.

(ஒ,5,105,159)

## கும்பாபிஷேகம் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,மார்ச் 21
எழுதுமட்டுவாழ் படித்த மகளிர் குடியேற்றத் திட்டம் ஸ்ரீ ஞானதுர்க் கைஅம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் பிற்போடப்பட்டுள்ளது. எதிர்வரும் வெள்ளிக்கி ழமை 27 ஆம் திகதி கும்பாபிஷேகம் நடைபெறவிருந்தது. எனினும் நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் கும்பாபிஷேகம் பிற்போடப்பட்டுள்ளது என்றுஆலய நிர்வாகத் தி னர் அறிவித்துள்ள னர். (க)

# தென்மராட்சி செயலகத்தை பிரிக்க அமைச்சரவை தயார்

**யாழ்ப்பாணம், மார்ச் 21**
**தென்மராட்சிப் பிரதேச செயலகத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு இறுதியாக நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக் கப்பட்டது.**

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் மிகப் பெரிய பரப்பளவையும் அதிக கிராம அலுவலர் பிரிவுகளையும் கொண்டதாக விளங்கும் தென்மராட்சிப் பிரதேச செய லர் பிரிவை இரு பிரிவுக ளாகப் பிரிப்பதற்கு பல ஆண்டுகளாக முயற்சிக்கப் பட்டது. எனினும், இழுபறியி லேயே காணப்பட்டது. கடந்த அரசு அதற்கு முயற்சி எடுத் திருந்த நிலையில் ஆட்சி மாறியிருந்தது.
இந்தநிலையில், கடந்த 11 ஆம் திகதி நடைபெறவி ருந்த அமைச்சரவை நிகழ்ச்சி நிரலில் தென்ம ராட்சி பிரதேச செயலக விட யம் பேசுவது என்று முடிவெ டுக்கப்பட்டிருந்தபோதும் அன்றையதினம் அமைச்ச ரவை நடைபெறவில்லை.
இந்தநிலையில், கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவையில் இந்த விடயம் பேசப்பட்டு பிரதேச செயலகத்தை இரண்டாகப் பிரிக்கும் விடயத்தை அமைச்சரவை ஏற்றுக் கொண்டது என்று தெரிவிக் கப்பட்டது.
அடுத்த அமைச்சரவையில் இந்தத் தீர்மானம் அனுமதிக் கப்பட்டு நடைமுறைப்படுத்து வதற்கான ஒப்புதல் அளிக் கப்படும் என்று மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது. (த-105)

## இணையக் கல்விக்குள் மாணவர்களே நுழைக!

### கல்வி அமைச்சு அழைப்பு

கொழும்பு,மார்ச் 21
பாடசாலை விடுமுறை காலத்தை பயனுள்ள தாக மாற்ற மாணவர்கள் அனைவரும் கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையதளத் தின் ஈ தக்சலாவ பகுதிக்கு நுழையுமாறு கல்வி அமைச்சு அழைப்பு விடுத்துள்ளது.
www.ethaksalawa.moe.gov.lk என்ற இணையதளத்துக்கு நுழைவதன் ஊடாக ஈதக் சலாவ கல்விக் கூடம் என்ற பகுதியுடன் இணைப்பை ஏற்படுத்த முடியும்.
சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூலமாக முத லாம் வகுப்பு தொடக்கம் 13 ஆம் வகுப்பு வரைக் குமான பாடப்பரப்புகளும், செயற்பாட்டு பயிற்சி களும் மற்றும் வினாத்தாள்களும் உட்சேர்க்கப் பட்டுள்ளன என்று கல்வி அமைச்சு அறிவித்தள் ளது. (ஐ)

## கம்பஹாவைச் சேர்ந்தோருக்கே கொரோனாவால் அதிகம் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 21
கொரோனா வைரஸ் தொற்றுக் குள்ளானவர்களில் பெரும்பாலா னோர் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என அறிவிக்கப் பட்டுள்ளது.
இதுவரையில் இலங்கையில் 70 பேர் கொரோனா வைரஸ் தொற் றுக்குள்ளாகியுள்ளமை இனங்கா ணப்பட்டுள்ளதுடன் அவர்களுள் 18 பேர் கம்பஹா மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளது.
கம்பஹா மாவட்டம் 18 பேர், கொழும்பு மாவட்டம் 17 பேர், புத்த ளம் மாவட்டம் 12 பேர், குருநாகல் மாவட்டம் 4 பேர், களுத்துறை மாவட் டம் 4 பேர், இரத்தினபுரி மாவட்டம் 3 பேர், காலி, மாத்தறை, மட்டக்க ளப்பு, பதுளை மாவட்டங்களைச் சேர்ந்த தலா ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
இதேவேளை கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி இருக்கலாம் என்ற சந்தேகத்தில் நாடளாவிய ரீதியில் உள்ள 14 மருத்துவமனை களில் 218 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஒ.5)



## வடக்கு மக்கள் மீது வேண்டும் கரிசனை

### அரசிடம் விஜயகலா வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 21
நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை யில், அரசு வடக்கு மக்கள் மீது அதிக கரி சனை செலுத்த வேண்டும் என்று முன் னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.
வடக்கு மாகாணத்தில் 8 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர்.
அவர்கள் அன்றாட உழைப்பை மேற் கொண்டு வாழ்ந்துவருபவர்கள். நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அறிவிக்கப் பட்டுள்ள நிலையில் வடக்கு மக்கள் பெரி தும் பாதிக்கப்படவுள்ளனர். ஏற்கனவே போரால் பாதிக்கப்பட்ட அவர்களுக்கு அரசு உதவ வேண்டும். வடக்கு மக்களுக்கு நிவா ரண உதவிகளை வழங்க முன்வர வேண் டும்- என்றார். (த-111)

## உண்மையை மறைத்த கொரோனா நோயாளி

### தனிமைப்படுத்தப்பட்ட மருத்துவக் குழுவினர்

கொழும்பு, மார்ச் 21
ராகம போதனா மருத்துவமனையின் மருத்துவர் கள் உள்ளிட்ட பணியாளர் குழுவினர் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.
கொரோனா தொற்றுக்குள்ளான ஒருவர், ஆண் கள் விடுதியில் சிகிச்சை பெற்றமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக ராகம மருத்துவமனை யின் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் சரத் பிரேமசிறி குறிப்பிட்டார்.
ஜாஎல பகுதியிலிருந்து நெஞ்சுவலிக்கு சிகிச்சை பெற வந்த நோயாளி ஒருவரிடம் கொரோனாவுக் கான அறிகுறிகள் உள்ளனவா, அல்லது வெளி நாடுகளில் இருந்து வருகை தந்தவர்களுடன் தொடர்புகள் காணப்பட்டதா என அடிக்கடி வின விய போதும், அவற்றை அவர் மறுத்துள்ளார்.
இருதய நோய்க்கு தேவையான சிகிச்சையை வழங்குவதற்காக அவரை சாதாரண விடுதியில் மருத்துவர் அனுமதித்துள்ளார்.
மருத்துவர்கள் அந்த நபர் தொடர்பில் உறவினர் களிடம் விசாரணைகளை மேற்கொண்ட போது, இத்தாலியில் இருந்து வருகை தந்தவர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணியமை தெரிய வந் துள்ளது. சடுதியாக அவரை தனிமைப்படுத்தி, தேவையான சிகிச்சைகளை மருத்துவமனை வழங்கியுள்ளது.
இருப்பினும் அவர் ஒன்றரை நாள்கள் சாதாரண விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுள்ளார்.
இதன் காரணமாக அவர் தங்கியிருந்த விடுதியிலிருந்த மருத்துவ நிபுணர்கள், மருத்து வர்கள், சிற்றூழியர்கள், தாதியர்கள், மருத்துவ உதவியாளர்கள், விடுதியில் தங்கவைக்கப்பட்டி ருந்த நோயாளிகள், அவர்களை பார்வையிட வந்தவர்கள் என்று அனைவரையும் தனிமைப்ப டுத்த நேரிட்டுள்ளது.
தொற்று தொடர்பில் ஏதேனும் அறிகுறிகள் காணப்படுமாயின் உடனடியாக தேவையான நட வடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஊடகங்கள் வாயிலாக அரசு அறிவித்த போதிலும், மக்கள் தங்களின் பொறுப்புணர்ந்து செயற்படுவதில்லை என ராகம மருத்துவமனையின் பிரதிப் பணிப்பா ளர் சரத் பிரேமசிறி சுட்டிக்காட்டினார்.
ஒருவரின் தவறால் மருத்துவமனையில் பலரை யும் தனிமைப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள் ளதாகவும் மருத்துவமனை நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ள தாகவும் அவர் குறிப்பிட்டார். (ஒ.5)

# கொரோனா தொற்றை தடுக்க விசேட ஏற்பாடு

மன்னார், மார்ச் 20
நாடளாவிய ரீதியில் மிகுந்த அச் சத்தை ஏற்படுத்தியுள்ளது. 'கொரோன வைரஸ்' அச்சுறுத்தல் தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப் புணர்வை ஏற்படுத்தும் வகையி லும், கொரோனா தொற்றைக் கட் டுப்படுத்த விசேட ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
மன்னார் சமூக பொருளாதார மேம் பாட்டுக்கான நிறுவனத்தின் (மெசிடோ) ஏற்பாட்டில் மன்னார் நகர சபை மற்றும் தேசிய நீர்வழங் கல் அதிகார சபையின் ஒத்துழைப் பில் மெசிடோ நிறுவனத்தின் குழுத் தலைவர் ஜாட்சன் பிகிறாடோ தலை மையில் நேற்று வெள்ளிக்கிழமை மன்னாரில் விசேட ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது.
மன்னார் மாவட்டத்தில் மக்கள் அதி கமாக நடமாடும் பகுதிகள் மற்றும் பஸ் நிலையங்களில் நீர்த்தாங்கிகள் பொருத்தப்பட்டு மக்கள் தங்கள் கைகள் மற்றும் உடலைச் சுத்தப்ப டுத்தி சுகாதாரமான முறையில் பரா மரிக்கும் ஏற்பாடுகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன.
கொரோனா தொடர்பான சுவரொட்டி கள் மக்கள் பார்வைக்காக பொது இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள் ளன.
விசேட நிகழ்ச்சித் திட்ட அறிமுக நிகழ்வில் மன்னார் சமூக பொருளா தார மேம்பாட்டுக்கான நிறுவன ஊழியர்கள், மன்னார் நகரசபை உறுப்பினர்கள், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.
மக்கள் மத்தியில் முன் னுதாரணமாகச் செயற்பட்ட மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறு வன ஊழியர்களுக்கு, மன்னார் மாவட்ட மக் களும், சமூக ஆர்வ லர்களும் தமது பாராட் டுக்களைத் தெரிவித் துள்ளனர். (க-56)



## வெளிநாடுகளிலிருந்து வந்த 143 பேர் உடுவிலில் பதிவு

யாழ்ப்பாணம்,மார்ச் 21
உடுவில் சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வெளிநாட்டில் இருந்து இலங்கை வந்துள்ள 143 பேர் சுகாதாரப் பிரிவினரிடம் பதிவு செய்துள்ளனர்.

இவர்கள் கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பாக, சுகாதாரப் பரிசோதகர்களின் கண்காணிப்பில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கத்தின் அசாதாரண நிலையில் அதனைத் தடுப்பதற்கான பல்வேறு பாதுகாப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துள்ளது.

அதன் ஒரு கட்டமாக, வெளிநாட்டில் இருந்து இலங்கை வந்திருக்கும் நபர்களைப் பதிவு செய்து, கொரோனா வைரஸ் . தொடர்பில் கண்காணிக்கும் நடவடிக்கைகளைச் சுகாதாரப் பிரிவினர் எடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (க39)

## சுகாதாரத் தொழிலாளர்களின் நலன்களை கவனத்தில் கொள்க

### அரச பொது ஊழியர் சங்கம் கோரிக்கை

வவுனியா,மார்ச் 20
**உள்ளூராட்சி மன்றங்களில் பணிபுரியும் சுகாதாரத் தொழிலாளர்களின் நலன்களில் அக்கறை செலுத்துமாறு, புதிய அரச பொது ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**



நகரசபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், சங்கத்தின் செயலாளர் இராமன் சித்திரன் மேலும் தெரிவித்ததாவது,

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாக்கும் முகமாக உலக சுகாதார அமைப்பு மற்றும் சுகாதார அமைச்சால் வழங்கப்படும் அறிவுரைகளைப் பின்பற்றுமாறு மக்களைக் கேட்டுக் கொள்கின்றோம். எனவே வைரஸ் தொற்றிலிருந்து எம்மைப் பாதுகாக்கும் முகமாக சுற்றுச்சூழலைச் சுத்தமாக வைத்திருப்பதோடு, எங்களது பகுதிகளுக்குப் புதிய நபர்களின் வருகையையும் அரசிடம் தெரிவிக்க வேண்டிய தேவை எமக்குள்ளது.

எங்களது கைகளைச் சுத்தமாக கழுவ வேண்டியதுடன், மற்றொருவருடன் உரையாடும் போது குறிப்பிட்ட தூரத்திலிருந்து உரையாட வேண்டும். வடபகுதியில் உள்ள அனைத்து சுத்திகரிப்பு தொழிலாளர்களும், தங்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் கடமையாற்ற வேண்டும். பொது மக்களின் பாதுகாப்பு என்பது எங்களுடைய

அத்தியாவசிய கடமையாக உள்ளது. எனவே கடமையில் ஈடுபடும் நாங்கள் எங்களை பாதுகாக்க வேண்டிய தேவையுள்ளது. எங்களது தேவைகளை பூர்த்தி செய்யும் முகமாக சம்மந்தப்பட்ட திணைக்களங்களில் உள்ள அதிகாரிகளுடன், இது தொடர்பாக கலந்துரையாடியுள்ளோம். அரசும் எங்களுக்கான நன்மைகளைச் செய்து வருகின்றது.

கொரோனா வைரஸ் தீவிரமடைந்து பலர் பாதிப்படைந்து வருகின்றனர். மேலும் அத்தியாவசிய தேவையுள்ள திணைக்களங்களின் சேவை முடங்கியிருக்கின்ற வகையிலும், பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலும் செயற்படும் படி கேட்டுக்கொள்கின்றேன். அத்தியாவசிய சேவையை செய்கின்ற உள்ளூராட்சி ஊழியர்களும், மனிதர்கள் என்பதைக் கருத்தில் கொண்டு அரச அதிகாரிகள், அவர்களையும் மனித நேயத்துடன் உற்று நோக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சுத்திகரிப்பு தொழிலாளர்களுக்கு கொரோனா வைரஸ் தாக்காத படியாக கவனம் செலுத்த வேண்டிய தேவை எமக்கிருக்கின்றது. சுத்திகரிப்பு தொழிலாளர்கள் மனிதர்களுடன் அதிகம் பழக வேண்டிய தேவையிருப்பதுடன் அவர்கள் தொட்ட பொருள்களை தொடவேண்டிய தேவையும் உள்ளது.

இந்தத் தொற்று நோயில் இருந்து தடுக்கும் முகமாக திணைக்களங்களில் கைவிரல் அடையாளம் இடும் செயற்பாடு இடம்பெறுகின்றது. இதன் மூலமாக கைவிரல்களில் இருந்து கிருமி தொற்று ஏற்பட சந்தர்ப்பம் உள்ளது. எனவே திணைக்களங்களில் பேணப்படும் கைவிரல் அடையாளங்களைத் தற்காலிகமாக நீக்குமாறும், ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும்; வடமாகாண ஊழியர்கள் சார்பாக கேட்டுக்கொள்கின்றோம். ஊழியர்களின் பாதுகாப்புக்காக பாதுகாப்பு உபகரணங்களையும் வழங்க வேண்டும் -என்றார். (க-110)

## தடையை மீறிய தம்புள்ள மேயர் கைது

கொழும்பு, மார்ச் 21
நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்லும் நிலையில், நாடெங்கும் பெரும் பரபரப்பான நிலை நிலவிவருகிறது. இந்த நிலையில், தம்புள்ள மேயர் உட்பட மற்றுமொரு நபர் கைது செய்யப்பட்டதாக பிரதிப் பொலிஸ்மா அதிபரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். மேற்படி நபர்கள், சைக்கிள் ஓட்டப் போட்டி ஒன்றை ஏற்பாடு செய்ததன் காரணமாகவே கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,5)



## கிராம அலுவலர் முன்பாக தாபரிப்புப் பணம் வழங்கவும்

### சாவகச்சேரி நீதிமன்ற பதில் பதிவாளர் அறிவுறுத்து

சாவகச்சேரி, மார்ச் 21
"சாவகச்சேரி நீதிமன்றிலுள்ள தாபரிப்பு வழக்குகளுக்காக, மாதாந்தம் பணம் செலுத்துவோர், தத்தமது பகுதி கிராம அலுவலர் அல்லது சமாதான நீதிவான் முன்னிலையில் உரியவர்களிடம் பணம் வழங்கி அதற்கான ஆதாரத்தைப் பெற்று வைத்திருங்கள்" என்று சாவகச்சேரி நீதிமன்ற பதில் பதிவாளர் அறிவுறுத்தியுள்ளார்.

தற்போது நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக, நீதிமன்றில் பணம் செலுத்தமுடியாத நிலை காணப்படுகின்றது. மாதாந்தம் கட்டுப்பணத்தை அந்தப் பகுதி கிராம அலுவலர் அல்லது சமாதான நீதிவான் முன்னிலையில் வழங்கி அதற்கான ஆதாரத்தைப் பெற்றுவைத்திருங்கள். நீதிமன்றம் செயற்படும் வேளையில் அந்த ஆதாரத்தைச் சமர்ப்பிக்கலாம் என்றும் பதில் பதிவாளர் அறிவித்துள்ளார்.

தாபரிப்புப் பணம் செலுத்துவோர் மாதாந்தத் தவணைகளின்போது நீதிமன்றில் வைத்து சம்பந்தப்பட்டவர்களிடம் பணம் வழங்கி வந்தது. 'கொரோனா' தொடர்பாக நீதிமன்றங்களின் செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில், தாபரிப்புப் பணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் குடும்பத்தின் நலன்கருதி மாற்று ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவித்தார். (த-9)

## விசாரணையின் பின்னே நோயாளர்கள் சேர்க்கை!

சாவகச்சேரி, மார்ச் 21
சாவகச்சேரி மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வருவோர் பல்வேறு கேள்விகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே பதிவு செய்யப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வருவோர் புலம்பெயர்நாடுகளில் நாட்டின் தென் பகுதிகளிலிருந்து வந்தவர்களா அல்லது அவ்வாறு வந்தவர்களை வாகனங்களில் ஏற்றிச் சென்றீர்களா அவர்களுடன் உணவருந்தினீர்களா என்ற கேள்விகளை வெளிநோயாளர் பிரிவில் கடமையாற்றுவோர் கேட்கின்றனர். சரியான பதில்களை வழங்குவோருக்குச் சிட்டை வழங்குகின்றனர்.

புலம்பெயர் நாடுகளிலிருந்து வந்தவர்களுடன் பழகியவர்களெனில் விஷேட பிரிவு மருத்துவ பிரிவுக்கு பணியாளர்களால் அழைத்துச் செல்லப்படுகின்றனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# சிறைக் கைதிகளுக்கு பாதுகாப்பு இல்லை!

## தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு கோரிக்கை




**யாழ்ப்பாணம், மார்ச் 21**

**'கொரோனோ' ஆபத்திலிருந்து சிறைக்கைதிகளைப் பாதுகாக்க போதிய முன்னாயத்த நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று குற்றம் சாட்டியுள்ள விடுதலைசெய்யப்பட்ட அரசியல் கைதியான மு.கோமகன், தமிழ் அரசியல் கைதிகளை அரசு உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று கோரியுள்ளார்.**

யாழ்ப்பாண ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனாவால் சிறைச்சாலைகள் பெரும் ஆபத்தான நிலையை எதிர்கொண்டுள்ளன. புதிதாகக் கைதுசெய்யப்படும் சந்தேக நபர்கள் எந்தவித உடல் பரிசோதனைகளும் இல்லாமல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்படுகின்றனர். சிறைச்சாலையில் கைதிகளின் சுகாதாரங்கள் உரியமுறையில் பேணப்படவில்லை.

தமிழ் அரசியல் கைதிகள் பல வருடங்களாகச் சிறையில் வாடுகின்றனர். நீரிழிவு நோய் உள்ளிட்ட தொற்றா நோய்களுக்கும் முகம்கொடுத்து வருகின்றனர். அந்த நோய்களால் அவர்கள் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாகவுள்ளது. அவற்றைக் கருத்திற்கொண்டு தமிழ் அரசியல் கைதிகளை பிணையில் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். என்று கோருகின்றோம்.

### சேர்த்து வைக்காதீர்கள்

நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் எமது அரசியல் கைதிகளைத் தூக்குத் தண்டனைக் கைதிகளோடு தடுத்து வைத்திருக்கின்றனர். இதனால் அவர்கள் உடல், உள ரீதியாகப் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளார்கள். அவர்கள் தொடர்பில் கரிசனை கொண்டு தூக்குத் தண்டனைக் கைதிகளோடு அவர்களைத் தடுத்து வைக்காது தனியாகத் தடுத்து வைக்குமாறும் கோருகின்றோம்.

'கொரோனா' தாக்கத்தால் ஈரானில் சிறைக் கைதிகள் பலரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். அதேபோல தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிக்கவேண்டும் - என்றார். (த-37)

---

# ரின்மீன், பருப்பு விலை அதிகமா? முறையிடுங்கள்

## பாவனையாளர் அ.சபையின் வவுனியா அலுவலகம் அறிவிப்பு

வவுனியா, மார்ச் 21

கடந்த 3 தினங்களில், தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், பருப்பு போன்றனவற்றை அதிக விலையில் விற்பனைசெய்த 6 வியாபார நிலையங்களுக்கு எதிராகவும், பொருள்களைப் பதுக்கிய வர்த்தகர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று, வவுனியா மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் பொறுப்பதிகாரி ச.நிலாந்தன் தெரிவித்தார்.

அரசு அங்கீகரித்த கட்டுப்பாட்டு விலையில் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதுடன் கூடிய விலையில் விற்பனை செய்யும் வியாபார நிலையங்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளோம்.

பொருள்களைப் பதுக்கும் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன.

நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையை வர்த்தகர்கள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்துவதைத் தவிர்த்து பொதுமக்களின் நலன் கருதி மனிதநேயத்துடன் தமது வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு வர்த்தகர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

பொதுமக்கள் தரப்பில் முறைப்பாடுகள் ஏதும் இருப்பின் வவுனியா மாவட்ட பாவனையாளர் அதிகார சபையின் 024 22 28 932 என்ற அலுவலக தொலைபேசி இலக்கத்துக்கு அல்லது அவசர இலக்கமான 1977 என்ற இலக்கத்துக்குத் தகவல் வழங்குங்கள் என்று கேட்டுக்கொண்டுள்ளார். (த-110)

---

# திருவிழாக்களை தவிர்க்கவும்

## இந்து ஆலயங்களின் ஒன்றியம் வேண்டுகோள்

மக்களை கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து பாதுகாக்கும் வகையில் இந்து ஆலயங்களில் நடைபெறும் திருவிழாக்களை தவிர்க்குமாறு இந்து ஆலயங்களின் ஒன்றியத்தினர் அறிவித்துள்ளனர்.

இந்து ஆலயங்களின் ஒன்றியத்தின் நிர்வாகத்தினரால் ஊடகவியலாளர் சந்திப்பு வவுனியா ஆதிவிநாயகர் ஆலய மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது கொரோனா தொற்று அதிகரித்து வரும் நிலையில் வவுனியா மாவட்டச் செயலர் மற்றும் பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கு அமைய வவுனியாவில் இருக்கும் இந்து ஆலையங்களில் இடம்பெறும் நித்திய நைமித்திய பூஜை நிகழ்வுகளின் போது மக்கள் கூடுவதைத் தவிர்த்து ஆலயக் கடமைகளை நிறைவேற்றவேண்டுமென அனைத்து இந்து ஆலையங்களின் பரிபாலன சபையினருக்கும் பக்தர்களுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதன்போது இந்துக்களின் கடமையாக இருக்கும் நித்திய நைமித்திய பூஜைகளை சுகாதார சீர்கேடு ஏற்படாத வகையிலும், மக்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறும் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இந்நிலையில் மக்கள் கூடும் வகையில் திருவிழாக்களை நடத்துவதை நிறுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர். (ஐ-110)

---





பேருந்து சேவை முடக்கம்

# வெறிச்சோடியது மன்னார் நகரம்

மன்னார், மார்ச் 21

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக அரச பேருந்து சேவைகள் நேற்று தடைப்பட்டதால் மன்னார் நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நாடுமுழுவதும் அரச பேருந்து சேவை நேற்று தடைப்பட்டது. இந்நிலையில் அவசர தேவைகள் கருதி தனியார் பேருந்துகள் சில சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. அவற்றிலும் பயணிகளின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. (ஐ-213)

---

# வெறிச்சோடிய களுவாஞ்சிக்குடி

மட்டக்களப்பு,மார்ச் 20

கொரோனா தொற்றிலிருந்து பொது மக்களைப் பாதுகாக்கும் நோக்குடன், நாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி பிரதேசம் வெறிச்சோடிக் காணப்பட்டது.

களுவாஞ்சகுடி பொதுச் சந்தை மற்றும் களுவாஞ்சிக்குடி நகரிலமைந்துள்ள பிரதான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

ஒரு சில வர்த்தக நிலையங்களிலும், வங்கிகளிலும் தன்னியக்கப் பணம் பெறும் நிலையங்களிலும் மக்கள் கூட்டத்தை அவதானிக்க முடிந்துள்ளது. படுவாங்கரைப் பகுதியிலிருந்து களுவாஞ்சிக்குடிப் பொதுச்சந்தைக்கு வந்த மக்கள் ஏமாற்றத்துடன், திரும்பிச் சென்றனர். (க-46)



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அடுத்தவர்கள் நல்லாயிருந்தாலே.....!

எரிகிற வீட்டில் பிடுங்குவதற்கு நம்மவர்களை மிஞ்ச ஆளே கிடையாது. கொரோனாவால் நாடே பதகளிப்பட்டுக் கொண்டிருக்கையில் அதை வைத்துப் பணம் பார்க்கும் வேலைகளும், அடுத்தவர்களைப் பதற்றத்தில் வைத்திருக்கின்ற காரியங்களும் மிகக் கச்சிதமாக நடக்கின்றன.

நேற்று இரவு **6** மணி முதல் **60** மணித்தியாலங்களுக்குத் தொடர்ச்சியான ஊரடங்கு உத்தரவை அறிவித்து, மக்களை வீடுகளுக்குள் இருக்கும்படி அரசு கோரியிருந்தது. எனவே இந்த **3** நாள்களுக்கும் தேவையான உணவுப் பொருள்களை வாங்குவதற்காக மக்கள் வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் வழக்கம் போல முண்டியடித்தார்கள். மக்கள் கூட்டமாகச் சேரக்கூடாது என்பதற்காகத்தான் ஊரடங்கைப் பிறப்பிக்க உள்ளமையும், அப்படி பலரே ஒன்று சேர்ந்து நிற்பதன் மூலம் கொரோனா தொற்றுவதற்கான ஏதுநிலையை அதிகரிக்கும் என்பதுவும் அநேகருக்கும் தெரியும். அப்படித் தெரிந்திருந்தபோதும், 'போனால் கூட்டமாகத்தான் போவோம்' என்று அடம்பிடித்துக் கொண்டு பலரும் திரண்டனர். அப்படிப் போனவர்களில் **99** சதவீதமானோர் முகக்கவசம் கூட அணியவில்லை. இன்னும் சிலரோ மூக்கைப் பொத்தினால் கொரோனா வராது என்று ஏதோ ஒரு சமூகவலைத்தளத்தில் , யாரோ வேலையில்லாமல் 'அடித்துவிட்ட' கதையொன்றைக் கேட்டிருப்பார்கள் போலும். அவர்கள் மூக்கைப் பொத்தியபடியே வரிசையில் காத்திருந்தார்கள்.

உண்மையில் கொரோனா காற்றில் பறந்து வந்து எங்களில் தொற்றுவதில்லை. அந்த வைரஸ் இருக்கும் இடங்களை அறியாமல் எங்கள் கைகள் அதில் படும் போது, உடனே கைகளில் தொற்றிக்கொள்ளும் கொரோனா, பின்னர் அந்தக் கைகளால் முகத்தைத் தொடும் போது மூக்கு, வாய், கண் ஆகியவற்றில் உள்ள மென்சவ்வுகள் ஊடாக ஊடறுத்து எம் உடம்பில் புகுந்து, நிலையெடுத்த பின்னர்தான் தன் தாக்குதலை அகோரமாக ஆரம்பிக்கும். இதை அறியாமல் மூக்கைப் பிடித்தபடி வரிசையில் நின்றவர்களின் வாய்களை 'ஆவென' பிளக்கச் செய்துவிட்டன பொருட்களின் விலைகள். குறிப்பாக முகக்கவசம், கைகளைச் சுத்தம் செய்யும்திரவம் என்பன அதில் குறிக்கப்பட்ட விலையையும் விட நாலைந்து மடங்கு அதிகவிலையில் விற்பனை செய்யப்பட்டன. அதிலும் முகக்கவசத்துக்கு அரசே விலை நிர்ணயம் செய்திருந்த போதும், அதைக் கிஞ்சித்தும் மதிக்காதவர்களாகவே வர்த்தகர்கள் தாம் நினைத்த விலைக்கு அவற்றை விற்று வந்தவரைக்கும் லாபம் பார்த்தனர். வாங்க வந்தவர்களும் லேசுப்பட்டவர்கள் இல்லை.

என்ன விலை என்றாலும் தாம் மட்டும் அவற்றை வாங்கினால் போதும் என்று, எவ்வளவுக்கு வாங்க முடியுமோ அவ்வளவுக்கு வாங்கிக் கொண்டு சென்றார்கள். அவர்களுக்கு ஒன்று புரியவில்லை. கொரோனாவைத் தடுக்க வேண்டுமானால், அவர்கள் மட்டும் அடிக்கடி கையைக் கழுவி, முகத்தை மூடினால் மட்டும் போதாது. மற்றவர்களும் கைகளைக் கழுவி, முகத்தை மூடினால் தான் கொரோனாவை அடக்க முடியும். எனவே கொரோனா விடயத்தில் சுயநலத்தை விடுத்து பொதுநலத்தோடு இருந்தால் மட்டுமே , நமக்கும் அது தொற்றாமல் பாதுகாக்க முடியும். அத்தோடு கொரோனா தொடர்பான செவிவழிக் கதைகளையும் உண்மைபோல மற்றவர்களிடம் பரப்பி தேவையற்ற பீதியையும் இந்தக் காலப்பகுதியில் உண்டாக்காமல் இருப்பது கூட ஒருவகையில் கொரோனாவைத் தடுக்கும் முயற்சியே.

கொஞ்சமேனும் தன்னைத் தான் காதலர்களாக மட்டுமிராமல், அடுத்தவர் நலனையும் காப்பதனூடாக நம் நலனைப் பேண அக்கறை கொள்வோமா?

# தேர்தல் பரப்புரையை விட்டு விழிப்புணர்வில் ஈடுபடவும்

## செல்வம் அடைக்கலநாதன் வேண்டுகோள்

**மன்னார், மார்ச் 21**

**தேர்தல் பிற்போடப்பட்டுள்ளமை யால், தேர்தல் பரப்புரைக்குப் பதிலாக 'கொரோனா வைரஸ்' தாக்கத்திலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் மக்களுக்கு விழிர்ப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான செயற்பாட்டை மேற்கொள்ளுங்கள்.**



இவ்வாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களிடமும், தொண்டர்களிடமும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோ கட்சியின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் நேற்று அவசர வேண்டுகோள் முன்வைத்துள்ளார்.

"நாடாளுமன்றத் தேர்தலுக்காக வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ள நிலையில், தற்போது எமது முக்கிய நோக்கமாக 'கொரோனா வைரஸ்' தொற்றைக் கட்டுப்படுத்தி மக்களைக் காப்பாற்றுவதற்கான பொறுப்பும் கடமையும் எங்களைச் சார்ந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரா கிய நாங்கள் எமது மக்களின் அனைத்து விடயங்களிலும் கவனம் செலுத்துகின்றவர்களாக இருக்கின்றோம். அந்த வகையில்தான் இந்த விடயத்திலும் நாங்கள் கடமைகளைச் சரியாகச் செய்ய வேண்டும்.

அவசர நிலை அறிவிப்பில் எப்படிச் செயற்பட வேண்டுமோ அவ்வாறான நிலையைப் பின்பற்றி கிராம ரீதியாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். தேர்தல் பரப்புரை வியூகங்களை மாற்றி 'கொரோனா வைரஸ்' தொற்றிலிருந்து விடுதலை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவதற்கான செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும். மக்கள் மத்தியில் கொரோனா வைரஸிலிருந்து பாதுகாப்பது தொடர்பில் விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

விலைக் குறைப்பால் அன்றாடம் உழைத்து குடும்பங்களை வழி நடத்துகின்றவர்கள் சரியான பலனை அடையவில்லை. இந்த விடயத்தில் ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டும்" என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (த-56)

# யாழ். போதனா நிலமைகளை நேரில் ஆராய்ந்தார் அங்கஜன்

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் போதனா மருத்துவனைக்குச் சென்று நிலமைகளை ஆராய்ந்தார்.

தற்போது நாட்டில் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ள நிலையில் மக்களிடையே ஏற்பட்டுள்ள அச்ச நிலமையைக் கருத்தில் கொண்டு அவர் அங்கு சென்று நிலமைகளை ஆராய்ந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி, பிரதிப் பணிப்பாளர் சி. யமுனாநந்தா ஆகியோருடன் கலந்துரையாடிய அவர் கொரோனா தொற்றுக்கான சிகிச்சை நிலமைகள் தொடர்பிலும் கேட்டறிந்தார்.

மருத்துவமனைத் தயார்ப்படுத்தல்கள் தொடர்பில் விளக்கமளித்த யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர், இதுவரை 8 பேர் சந்தேகத்தின் அடிப்படையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 5 பேர் மருத்துவமனையில் இருந்து வெளியேறியுள்ளனர். கொரோனா தொற்றாளர்களுக்கான விடுதி 20 படுக்கைகளுடன் தயார்ப்படுத்தப்பட்டுள்ளது. வடக்கைப் பொறுத்தவரையில் இதுவரை எவருக்கும் தொற்று இனங்காணப்படவில்லை. அதனால் மக்கள் தேவையற்று அச்சப்படத் தேவையில் என்று தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அங்கஜன் இராமநாதன், தற்போது கொரோனா தொற்று காணப்படும் நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை அதற்குரிய தயார்ப்படுத்தல்களுடன் உள்ளதா என்று அறியவே சென்றிருந்தேன். இந்த நிலமையைச் சமாளிப்பதற்கான தயார்ப்படுத்தல்களுடன் மருத்துவமனை உள்ளது. அரசும், சுகாதாரத் துறையினரும் கூறும் நடைமுறைகளை மக்கள் பின்பற்ற வேண்டும். பீதியடையாது வீட்டிலிருந்து ஏழுநாள் வேலை செய்யுங்கள். அதன்மூலம் வடக்கில் தொற்று ஏற்படுவதைத் தடுக்க முடியும் என்றார்.

# யுத்தம் வேறு: வைரஸ் வேறு!

## ராஜித கிண்டல்

கொழும்பு, மார்ச் 21

போரை நிறைவு செய்ததைப் போன்று முப்படையினரைக் கொண்டு கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியாது. மருத்துவத் துறை சார்ந்தவர்களின் கைகளிலேயே தற்போது நாட்டு நிலைவரம் தங்கியுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

'போரின் போது முப்படையினரைக் கொண்டு பயங்கரவாதத்தை ஒழித்ததைப் போன்று அப்போதைய பாதுகாப்பு செயலாளராக கடமையாற்றிய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் தலைமையில் கொரோனா வைரஸையும் கட்டுப்படுத்த முடியும் என்று எதிர்பார்ப்பது தவறாகும்.' என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## மாரடைப்பால் ஒருவர் சாவு

ஊரடங்குச் சட்டத்துக்கு முன்னர் அத்தியாவசிய பொருள்களை வாங்குவதற்காக கடைக்கு வந்த ஒருவர் கம்பஹாவ மாவட்டத்தில் நேற்று மாரடைப்பால் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.5)





## கொடிகாமத்திலும் மக்கள் முண்டியடிப்பு

கொடிகாமம், மார்ச் 21

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றுக் காரணமாக, நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டதை அடுத்து, கொடிகாமம் நகரிலும் மக்கள் பொருள்களைக் கொள்வனவு செய்ய முண்டியடித்ததை அவதானிக்க முடிந்தது.

நாடு முழுவதும் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் திங்கட்கிழமை காலை ஆறு மணி வரை அமுலில் இருக்கும் வகையில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கொடிகாமம் சந்தையில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள், மருந்துப் பொருள்களை மக்கள் அதிகளவு கொள்வனவு செய்தனர்.

அதேவேளை அரசாங்கத்தால் விலைக்கட்டுப்பாடு அறிவிக்கப்பட்டரின் மீன், பருப்பு கடைகளில் முழுமையாக விற்றுத் தீர்ந்தன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-159)

# 142பேரை சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த நீதிமன்றம் உத்தரவு

**கொழும்பு, மார்ச் 21**

**சுய தனிமைப்படுத்தல், தொற்று நீக்கல் நடவடிக்கைகளை முறையாக செய்யாத வெளிநாட்டிலிருந்து வந்த 142 பேருக்கு, தனிமைப்படுத்தல், தொற்று நீக்கல் நடவடிக்கைகளை சரியான முறையில் முன்னெடுக்குமாறு இரு நீதிமன்றங்கள் உத்தரவு பிறப்பித்துள்ளன.**

ஹட்டன் மற்றும் மாரவில நீதிவான் நீதிமன்றங்கள் இது தொடர்பிலான நீதிமன்ற உத்தரவுகளை பிறப்பித்துள்ளதாக பொலிஸாரும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் தெரிவித்தனர்.

வெளிநாட்டிலிருந்து வந்து தனிமைப்படுத்தல், தொற்று நீக்கல் நடவடிக்கைகளுக்குட்படாத அம்பகமுவ பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 76 பேருக்கும் மாரவில பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 66 பேருக்கும் எதிராக முறையாக தனிமைப்படுத்தலில் ஈடுபடவில்லை என்று பொலிஸாரும் பொதுச் சுகாதார பரிசோதகர்களும் தொற்று நோய் தடுப்பு கட்டளை சட்டத்தின் கீழ் அறிக்கை சமர்ப்பித்தனர். அதனை ஆராய்ந்தே நீதிமன்றங்கள் குறித்த 142 பேருக்கும் முறையாக சுய தனிமைப்படுத்தல் மற்றும் தொற்று நீக்கல் நடவடிக்கையில் ஈடுபட உத்தரவிட்டுள்ளது. (ஒ.5)

## வெளி மாவட்டங்களிலிருந்து வருவோரை கண்காணிக்கவும்

கொரோனா அச்சம் காரணமாகவெளிமாவட்டங்களில் இருந்து மன்னார் மாவட்டத்துக்குள்வருபவர்களை அவதானமாகக் கண்காணிப்பது அவசியம்என்றுமன்னார்மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற முன்னாயத்தக் கூட்டத்தில் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் தொடர்பான இரண்டாவது முன்னாயத்தக் கூட்டம், மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில், மாவட்டச் செயலகத்தின்நீலோற்பவ மண்டபத்தில்நடைபெற்ற கலந்துரையாடலில்இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது. கலந்துரையாடலில்மேலும்தெரிவிக்கப்பட்டதாவது,

இலங்கையில்கொரோனா வைரஸ் தொற்றுக்கள் அடையாளம் காணப்படின், வெளிநாடுகளில் இருந்து புத்தளம் மாவட்டத்துக்கு வருகை தந்த பெருமளவிளானவர்கள் உரிய மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்ளாமல்புத்தளம்மாவட்டத்துக்கு வந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகிய பின்னர் அங்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது ஊரடங்குநீக்கப்பட்டபின்னர்புத்தளம்மாவட்டத்தில் உள்ளவர்கள், மன்னார் மாவட்டத்துக்குள் உந்துருளிகளிலும், வாகனங்களிலும் அதிகமாக வருகை தருகின்றனர். அவர்களை முறையாகக்கண்காணித்துகாவலரண்கள் மூலம் பதிவுகளை மெற்கொண்டு மட்டுப்படுத்தும் முடியும்.

தேவையில்லாமல்வெளிமாவட்டத்தவர்கள்கிராமப்புறங்களிலும், உறவினர்கள் வீடுகளிலும் தங்க வைக்கப்பட்டிருந்தால்பிரதேசசெயலகங்கள்மூலம் உரிய நடவடிக்கைகள் எடுக்கும்படியும்உரியஅதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (க-213,105)



## பெரமுனவின் பட்டியலில் சுரேன் ராகவன்

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தேசியப் பட்டியல் மூலம் தெரிவுசெய்யப்பட உள்ளவர்கள் தொடர்பாக சிறிலங்கா பொதுஜன பெரமுன பட்டியலொன்றை வெளியிட்டுள்ளது. இந்தப் பட்டியலில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், துறைசார் நிபுணர்கள், தொழிற்துறையினர், சமூக ஆய்வாளர்கள் என்ற அடிப்படையில் 29 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இதில் வடக்கு மாகாண முன்னாள் ஆளுநரும் விரிவுரையாளருமான சுரேன் ராகவனுக்கு பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியலில் வாய்ப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில், பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதி சட்டத்தரணி மொஹமட் அலி சப்ரி, சமூக ஆய்வாளர் கெவிது குமாரதுங்க, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலர் ரோஹன் லக்ஷ்மன் பியதாச, ஓய்வுப்பெற்ற கிரிக்கெட் வீரர் டில்சான் ஆகியோர் உள்ளடங்குகின்றனர். (ஒ.5)

## தமிழ் அரசியல் கைதியை விடுவிக்கக் கோரி ஜனாதிபதிக்கு மனு



முல்லைத்தீவு,மார்ச் 21

கொரோனோ வைரஸ் தொற்று அச்சம் காரணமாக சிறையில் உள்ள தனது கணவரான தமிழ் அரசியல் கைதியை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதிக்கான கோரிக்கை மனுவை, முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க. விமலநாதனிடம் அரசியல் கைதியின் துணைவியார் கையளித்தார்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு உடையார்கட்டைச் சேர்ந்த நடேசு குகநாதன், விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்டார். மூன்று ஆண்டுகள் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் உயர்நீதிமன்றத் தீர்பின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் ஒரு ஆண்டு புனர்வாழ்வு பெற்று 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டார்.

அதன் பின்னர் குடும்பத்துடன் வாழ்ந்த அவரை, 2013 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9 ஆம் திகதி அன்று தொலைபேசி மூலம்விசாரணைக்காக அழைத்து, மீண்டும் கைது செய்து பூசா சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டார். பின்னர் 2015 ஆம் ஆண்டு நியூமகசின் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டு தற்போது வரை தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

எனவே தற்போது நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் தொற்று சில சிறைச்சாலைகளுக்கும் பரவியுள்ளதாக அறியப்படுகின்றது இந்த நோய் தொடர்பில் பிள்ளைகளும் தந்தையைப் பற்றி மிகுந்த கவலை தெரிவிக்கின்றனர். இந்த நோயில் இருந்து பாதுகாப்பதற்காக ஜனாதிபதி கருணை கூர்ந்து எனது கணவரை பிணையிலாவது விடுதலை செய்ய வேண்டும்.

சிறையில் உள்ள ஏனைய அரசியல் கைதிகளையும் இந்த சூழ்நிலையில் விடுதலை செய்ய வேண்டும் என்று அவர் மனைவி தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். (க-19)

# கொரோனாவை ஒழிக்க எதனோல்

கொழும்பு, மார்ச் 21
கிருமி நாசினிகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான ஆயிரம் லீற்றர் எத்தனோலை, சுகாதார அமைச்சுக்கு வழங்கியுள்ளதாக கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.
கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பிரதி கலால் திணைக்கள பணிப்பாளர் கபில குமாரசிங்க தெரிவித்துள்ளார். 1000 லீற்றர் எத்தனோலைப் பயன்படுத்தி, ஒரு இலட்சத்து இருபதாயிரம் லீற்றர் கிருமி நாசினிகளை உற்பத்தி செய்ய முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந)

# தேர்தல் ஒத்திவைப்பு சஜித் வரவேற்பு



**கொழும்பு, மார்ச் 21**
**நாடாளுமன்ற தேர்தலை ஒத்திவைக்கும் தீர்மானத்தை முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வரவேற்றுள்ளார். கொழும்பில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
உலகளாவிய ரீதியில் பெரும் நெருக்கடியை ஏற்படுத்திய கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாட்டு மக்கள் பெரிதும் அச்சத்தில் இருக்கின்றனர்.
பொதுத் தேர்தலைப் பிற்போடுவதற்கு தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்திருப்பதை வரவேற்பதுடன், நாட்டு மக்களின் நலன் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு கவனம் செலுத்தியதற்காக ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய மற்றும் ஆணைக்குழுவினருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.
இந்தத் தீர்மானம் முன்னரே எடுக்கப்பட்டிருக்க வேண்டும். இருந்த போதிலும் தேர்தல் ஆணைக்குழு இந்த முடிவை எடுத்துள்ளது. மக்களுக்கான பலத்தைப் பெற்றுக் கொடுப்பது அரசின் கடமையாகும். கனடா பிரதமர் ஜஸ்டீன் ட்ரூட்டோ அந்நாட்டு மக்களுக்கு நெருக்கடி நிலைமையைக் கருத்தில் கொண்டு நிவாரணப் பொதியொன்றை பெற்றுக் கொடுத்துள்ளார். இதேபோன்ற நிவாரணப் பொதிகள் எம் நாட்டு மக்களுக்கும் பெற்றுக் கொடுக்கப்படவேண்டும். தற்போது வைரஸ் பரவல் காரணமாக தொற்று நீக்கம் மற்றும் ஆள் நடமாட்டங்களைக் குறைத்தல், ஊரடங்குச் சட்டம் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. உலகச் சந்தையில் எரிபொருள் விலை பெரியளவில் குறைந்துள்ள போதிலும் அரசு மேலும் ஒரு வருடத்துக்கு எரிபொருள் விலையை குறைக்க போவதில்லை என்று அறிவித்திருக்கின்றது.
ஏன் இவ்வாறான அறிவிப்பை விடுத்துள்ளது என்பது தொடர்பில் எமக்கு ஒன்றும் புரியவில்லை.
தேர்தல் ஆணைக்குழுவும் தேர்தலை பிற்போட்டுள்ள நிலையில் உடனே நாடாளுமன்றத்தை கூட்டி, நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை தொடர்பில் கலந்துரையாடி மக்களுக்கான நிவாரணப் பொதியைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். (ஒ,5)



# ஊரடங்கால் மக்கள் பதற்றம்

## பொருள்களை வாங்க முண்டியடிப்பு

மன்னார்,மார்ச் 21
கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக நாடு முழுவதும், ஊரடங்குச் சட்டம் நேற்று முதல் அமுல் படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டதை அடுத்து, மன்னாரில் மக்கள் பொருள்களைக் கொள்வனவு செய்ய, நகர் நோக்கிப் படையெடுத்ததைக் காண முடிந்தது. பொருள்களைக் கொள்முதல் செய்யவும், வங்கி களுக்கும் மக்கள் நகர் நோக்கிப் பெருமளவில் படையெடுத்தனர்.
மன்னார் நகரில் குறுக்கு வீதிகள், பிரதான கடைப் பகுதிகளில் அமைந்துள்ள கடைகளில் மக்கள் நெரிசலாகக் காணப்பட்டதால், வீதிப் போக்குவரத்து பெரிதும் தடைப்பட்டது. அதனால் பொலிஸார் வீதி ஒழுங்குகளைச் சீர்ப்படுத்தினர். (க-60)

# சுசீலன் பவுண்டேசனால் மக்களுக்கு சவர்க்காரம்



முல்லைத்தீவு,மார்ச் 21
தற்போது உலகை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் முல்லைத்தீவு மாவட்டத்திலும் பரவாமல் இருக்க, முல்லைத்தீவு மக்களுக்கு ஒரு தொகை சவர்க்காரங்கள், சுசீலன் பவுன்டேசன் நிறுவனத்தினரால் பகிர்ந்தளிக்கப்பட்டன. முல்லைத்தீவு, முள்ளியவளை, தண்ணீரூற்று நகர் பகுதிகளில் உள்ள வணிக நிலையங்கள் மற்றும் பலநோக்குக் கூட்டுறவு சங்கம் மற்றும் இளைஞர்களின் உதவியுடன் கொரோனா தொடர்பிலான சுகாதாரப் பழக்க வழக்கங்கள் தொடர்பில் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. அத்துடன் சவர்க்காரங்களும் வழங்கப்பட்டன. (க-19)

# தொலைத்தொடர்பு சேவை அத்தியாவ சேவையாக அறிவிப்பு

கொரோனா வைரஸ் பரவலின் காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில், தகவல்களை வழங்கும் தொலைத் தொடர்பாடல் சேவைகள் மிகவும் முக்கியத்துவம் பெறுவதனால் அதனை அத்தியாவசிய சேவையாக இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அறிவித்திருக்கிறது. நாட்டினுள் கொரோனா வைரஸ் தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நேற்று முதல் எதிர்வரும் 27ஆம் திகதி வரை சுகாதாரம், போக்குவரத்து உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய அனைத்து அரச மற்றும் தனியார் துறையினருக்கு 'வீட்டிலிருந்து பணிபுரியும் வாரம்' என்று அரசால் அறிவிக்கப்பட்டது. இந்த நிலையிலேயே தொலைத் தொடர்பாடல் சேவைகளை அத்தியாவசிய சேவையாக இலங்கைத் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ஒ,5)

**உறவினர்களே, நண்பர்களே !!**
**21.03.2020 சனிக்கிழமை நடைபெறவுள்ள எமது (Sangar and Dilo) திருமண நிகழ்வு சம்பந்தமாக;**
அனைத்து தற்கால நிலைமைகளும் சுமூகமானதாக மாறும் போது திருமண உபசரிப்பு நிகழ்வினை நடத்தி, உங்கள் அனைவரையும் அன்புடன் மீண்டும் அழைப்போம்.!!
**துரைசிங்கம் சங்கரதாஸ் மற்றும் டிலோஜினி குருநாதன்.**
(ஏ.12034) (13.17)
தொடர்புகளுக்கு. 0771915468/ 0776589029

**அறிவித்தல்**
தென்மராட்சி பிரதேச செயலகத்தில் 18.03.2020 புதன்கிழமை இடம்பெற்ற விசேட கூட்டத் தீர்மானத்தின் படி நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமை காரணமாக பங்குனித் திங்கள் உற்சவத்தில் பக்தர்கள் வருகை தருவது, நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுதல் என்பவற்றை தற்காலிகமாக தவிர்த்துக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. தமது அனுஷ்டானங்களை வீட்டிலிருந்தவாறே கடைப்பிடிக்குமாறு கோருகின்றோம். எனவே பக்தர்கள் நோய்த் தொற்று கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்வதுடன் விரைவில் உலக மக்கள் அனைவரும் நோய்த் தொற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொண்டு வழமையான வாழ்க்கைக்கு திரும்ப வேண்டுமென அம்பாளை பிரார்த்திக்கின்றோம்.
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.
கண்ணகை அம்மன் கோவில் சிவ-பஞ்சாட்சரம் தர்மகர்த்தா பன்றித் தலைச்சிச்

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர் பொன்னையா பரமசாமி
திதி: 21.03.2020

ஆண்டு மூன்று கடந்ததப்பா - விண்ணோடு கலந்தே
மாண்டு நின்று நடந்த உங்கள் - பாதம் பார்த்தே
ஈண்டு குன்று படர்ந்த தங்கள் - பாசம் தேடி
வாண்டுகள் நாம் மன்று கிடந்து - வாடுகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
மண்ணுலகில் 6.10.1935
விண்ணுலகில் 25.03.2017
(ஏ.953) (13.17) குடும்பத்தினர்

**விசேட அறிவித்தல்**
**அமரர் ஐயாத்துரை தியாகராசா** அவர்களின் 22.03.2020 ஞாயிற்றுக்கிழமை இடம்பெற இருந்த அந்தியேட்டி நிகழ்வு தற்போதைய நாட்டு சூழ்நிலையில் பிற் போடப்பட்டுள்ளது.
மேலதிக விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.
தகவல்: குடும்பத்தினர்.



# அன்பான யாழ்ப்பாண மக்களே...

## ஒரு மருத்துவரின் ஆலோசனைகள்

■ மருத்துவர் கௌதமன்


தற்போது இலங்கை உட்பட உலக நாடுகளை அச்சுறுத்தும் கொரோனா வைரஸ் பற்றி அறியாதவர்கள் கிடையாது. அதன் தாக்கங்களால் வளர்ச்சியடைந்த நாடுகளே பதறியடிக்கின்ற நிலைமையையும் ஊடகங்களினூடாகவும் சமூக வலைத்தளங்களினூடாகவும் பார்த்த பிறகும் ஏன் அலட்சிய போக்கில் இருக்கின்றீர்கள்.

- உங்களை வெளியிடம் செல்லாமல் வீடுகளில் இருக்கப் பரிந்துரைத்தும் வீதிகளில் நிற்கின்றீர்கள்.
- கடைகளில், வீட்டு விழாக்களில், மத வழிபாட்டு இடங்களில் கூட்டம் கூட்டமாக நிற்கின்றீர்கள். நண்பர்களுடன் சேர்ந்து கதைத்தல், ஊர் சுற்றுகின்றீர்கள்.
- வைத்தியசாலைக்குத் தேவையற்ற காரணத்துக்காக வருகை தருதல், நோயாளியைப் பார்வையிட கூட்டமாக குடும்பத்துடன், குழந்தைகளுடன் வருகின்றீர்கள்.
- இருமல், காய்ச்சல் இருந்தால் மற்றவர்களுக்கும் பரவும் என்ற எந்தக் குற்ற உணர்வும் இன்றி (தனிமையாக இருக்காமல்) மற்றவர்களுக்கு அருகில் இருத்தல், அவர்களின் முகத்துக்கு நேராக இருமுதல்.
- பாதுகாப்பாக இருப்பவர்களை பார்த்து ஏளனம் செய்தல்.
- எனக்கு வராது என்ற தவறான எண்ணம். அறிகுறிகள் இருப்பின் கொரோனாவாக இருக்காது என்ற எண்ணம். தனக்கு அறிகுறி இருப்பதை மற்றவர்களிடம் மறைத்தல்.
- வெளிநாட்டில் இருந்து வருபவர்கள் தாமாக முன் வந்து வைத்தியசாலையை அணுகாமை. வருபவர்களை வீட்டில் மறைத்து வைத்திருத்தல். அவர்களைத் தேடிவரும் காவல் மற்றும் சுகாதார உத்தியோகத்தர்களினது கடமைகளுக்கு ஒத்துழைப்பு வழங்காமல் இருத்தல்.
- இந்த மோசமான நிலைமையை பயன்படுத்தி வியாபாரத்தை நடத்தி பணம் ஈட்ட நினைக்கும் கேவலமான எண்ணம். அதில் மக்களைக் கவர்ந்து நோய் பரவ வழிவகுத்தல்
- நோய் அச்சம் இன்றி வீட்டுப் பொருள்கள் வாங்கி குவிப்பதில் குறியாக இருத்தல்.
- இலங்கையில் பரவாது என்ற தவறான எண்ணம்.

இப்படியான செயல்கள் நிச்சயமாக உங்களுக்கு நோய் பரவ வழிவகுக்கும்.

**நோய் கடுமையாகப் பரவினால்..**

- கட்டுப்படுத்த முடியாது. கண்ணுக்குத் தெரியும் டெங்கு நோய் கிருமியை பரப்பும் நுளம்பையே கட்டுப்படுத்த முடியாத நாம், கண்ணுக்குத் தெரியாத கொரோனாவை கட்டுப்படுத்த முடியாது.
- கொரோனாவுக்கு மருந்தோ தடுப்பு மருந்தோ கிடையாது.
- யாழ்ப்பாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் கொரோனா கட்டுப்பாடின்றி பரவினால் வசதிகள் கிடையாது. வளர்ச்சியடைந்த நாடுகளிலே முடியாத ஒன்று யாழ்ப்பாணத்தில் முடியுமா?



- உங்கள் மக்களுக்கு நோய் வந்தால் தனிமைப்படுத்தப்பட்டு இருக்கும் வழக்கம் கிடையாது. தனக்கு ஏற்பட்ட நோயை இன்னொருவருக்கு பரப்புவதில் திருப்தி காணும் கேவலமான மனப்பாங்கு உடையவர்கள். நிச்சயமாக உங்கள் நண்பர்கள் அல்லது உறவினர்களுக்கு வந்தால் உங்களுக்குப் பரவாமல் இருக்க எந்த நடவடிக்கைகளையும் எடுக்கமாட்டார்கள்.
- இந்த நோய் ஒரு கட்டத்துக்கு அப்பால் வைத்தியர்களினது கையை மீறிய ஒரு நோய். குணப்படுத்த முடியாது.

**ஆகவே...**

- உங்கள் வீடுகளில் உள்ள வயது வந்தவர்கள் சல ரோகம், இருதய நோய், இரத்த அழுத்தம், புற்றுநோய் போன்ற நோய் இருக்கும் உங்கள் அன்பிற்குரியவர்கள் உங்களுக்கு இடைஞ்சலாக இருப்பின் நீங்கள் எந்தவித தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளாது அவர்களை கொரோனாவால் கொல்லுங்கள்.



- உங்கள் குழந்தைகள், மனைவி, சகோதரங்கள் நோயில் துடிப்பதை ரசிக்கும் மனம் உடையவர்களானால் தடுப்பு நடவடிக்கை வேண்டாம்.
- நீங்கள் நீண்ட காலம் நோய் ஒன்றில் அவஸ்தைப் பட ஆசைப்பட்டால், மூச்சு எடுக்க முடியாமல் துடிதுடிப்பதை விரும்பினால், தொண்டைக்குள் குழாய் இயந்திரம் மூலம் சுவாசிக்க ஆசைப்பட்டால் தடுப்பு நடவடிக்கை வேண்டாம்.
- பல இடத்தில் இறப்புச் சடங்கு, எட்டு சாப்பாட்டு சாப்பிட ஆசைப்பட்டால் தடுப்பு நடவடிக்கை வேண்டாம்.
- ஒரு வேளை உங்களுக்கு மரணம் ஏற்பட்டால் யாரும் உங்கள் பிணத்தின் கிட்ட வராமல் நடு வீதியில் நாய்களுக்கும், காக்காய்களுக்கும், எறும்புகளுக்கும் விருந்திட்டு அநாதைப் பிணமாக ஆசைப்பட்டால் தடுப்பு நடவடிக்கை வேண்டாம்.
- விழிப்புணர்வு மற்றும் சமூக அக்கறை அற்ற ஒருவர் தன்னைத் தானே கொரோனாவால் அழித்துக் கொண்டார் என்ற புண்ணியத்துக்காக சொர்க்கமோ...
- அல்லது,

அழகான அன்பான குடும்பத்தில் உள்ள அங்கத்தவர்களைத் தன் சமூக பொறுப்பற்ற நடவடிக்கைகளால் கொரோனாவால் கொலை செய்தார் என்ற குற்றத்துக்காக நரகத்தையோ சீக்கிரம் பார்க்க ஆசைப்பட்டால் தடுப்பு நடவடிக்கை வேண்டாம். இதுவே கசப்பான உண்மை.

மன்னிக்கவும். ■

# தடுப்பிலிருந்து தப்பியோடுவோர் தேசத் துரோகிகள்!

## மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 21

வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வந்து, தங்களை தடுப்பு முகாமுக்கு அனுப்ப வேண்டாம் என்று ஆர்ப்பாட்டம் செய்வோர், தனிமைப்படுத்தும் மையங்களிலிருந்து தப்பியோடுவோர் அனைவரும் தேசத் துரோகிகளாக கருதப்பட வேண்டும் என்று போக்குவரத்து சேவைகள் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமைக்கு, அவர்களே காரணம் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.



பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் பின்னர், ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டோருக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்றும் நாட்டின் தற்போதைய நிலைக்கு, இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டோரே பொறுப்புக்கூற வேண்டும் என்றும் அவர் கூறினார்.

முப்படையினர், சுகாதார சேவையினரின் அர்ப்பணிப்பைப் பாராட்டிய அவர், மற்றைய நாடுகளுடன் ஒப்பிடும்போது, நம் நாட்டிலுள்ள முப்படையினரும் சுகாதார சேவர்களுமே, மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ,5)

## இந்தியாவில்

### கொரோனாவுக்கு

# ஐவர் பலி!

புதுடெல்லி, மார்ச் 21
கொரோனா வைரஸால் இந்தியாவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 5ஆக அதிகரித்தது.
நேற்றுக் காலை வரையான நிலவரத்தின்படி கொரோனாவுக்கு இந்தியாவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4ஆக இருந்தது. நேற்று மாலை ராஜஸ்தானில் ஒருவர் உயிரிழந்ததை அடுத்து உயிரிழப்பு எண்ணிக்கை 5ஆக அதிகரித்தது. மேலும் சிலரின் நிலைமை கவலைக்கிடம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



# பொலிவூட் பாடகிக்கு கொரோனா தொற்று!

**புதுடெல்லி, மார்ச் 21**
**பொலிவூட் பாடகி கனிகா கபூருக்கு கொரோனாத் தொற்று இருப்பது சர்வதேச சமூகத்தை அதிரச் செய்துள்ளது.**

“தொற்றுக்குள்ளான பொலிவூட் பாடகி கனிகா கபூர் கலந்துகொண்ட நிகழ்ச்சி ஒன்றில் அரசியல் பிரபலங்கள், சினிமா நடிகர், நடிகைகள் என 100 பேர் வரையில் கலந்து கொண்டுள்ளனர்.



இந்தியாவிலும் கொரோனா வைரஸ் தொற்று பரவி வருகிறது. இதனைத் தடுக்க மத்திய அரசும், பல்வேறு மாநில அரசுகளும் நடவடிக்கை எடுத்து வருகின்றன. எனினும் கொரோனா தொற்று காரணமாக பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை மெல்ல உயர்ந்து வருகிறது. பல மாநிலங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளன. பொது இடங்களில் மக்கள் கூட கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. திரையரங்குகள், பொழுதுபோக்குப் பகுதிகள் என அனைத்தும் மார்ச் 31ஆம் திகதி வரை மூடப்பட்டுள்ளன. ஊழியர்கள் வீடுகளில் இருந்து பணியாற்ற வேண்டும் என தனியார் நிறுவனங்கள் அறிவுறுத்தியுள்ளன.
இந்நிலையில் பொலிவூட் பாடகி கனிகா கபூருக்கு கரோனா ரைவஸ் தொற்று இருப்பது உறுதியாகியுள்ளது. கனிகா கபூர் மார்ச் 9ஆம் திகதி லண்டனில் இருந்து மும்பை திரும்பியுள்ளார். பின்னர் அவர் லக்னோ சென்றுள்ளார். லக்னோவில் நடந்த இரவு விருந்து நிகழ்ச்சி ஒன்றில் அவர் பங்கேற்றுள்ளார்.
அந்த நிகழ்ச்சியில் அரசியல் பிரபலங்கள், சினிமா நடிகர், நடிகைகள் என 100 பேர் வரையில் கலந்து கொண்டுள்ளனர். கனிகா தான் லண்டனில் இருந்து வந்ததையும், தனக்குக் கொரோனா தொற்று சோதனை நடந்ததா என்பதையும் யாரிடமும் கூறவில்லை எனக் கூறப்படுகிறது. (ம)

# கனிகாவுக்கு கொரோனா; அச்சத்தில் பா.ஜ.கவினர்



புதுடெல்லி, மார்ச் 21
பொலிவூட் பாடகி கனிகா கபூருக்குக் கொரோனா தொற்று உறுதியாகியுள்ள நிலையில் அவருடன் நிகழ்ச்சியில் பங்கேற்ற பா.ஜ.க எம்.பி.துஷ்யந்த் தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்வதாக அறிவித்துள்ளார்.
இதனால் துஷ்யந்த்துடன் நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் பங்கேற்ற எம்.பிக்கள் அச்சம் அடைந்துள்ளனர். (ம)

## நிர்பயா கொலையாளிகளின்

# இறுதி வார்த்தைகள்!

புதுடெல்லி, மார்ச் 21
நிர்பயா பாலியல் வன்கொடுமை வழக்கில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்ட குற்றவாளிகள் 4 பேரின் உடல்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.
2012ஆம் ஆண்டு மருத்துவ மாணவி நிர்பயா பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் முகேஷ் சிங், பவன் குப்தா, வினய் சர்மா, அக்சய் குமார் சிங் ஆகியோருக்கு தூக்குத் தண்டனை வழங்கி டெல்லி நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்த தண்டனையை உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் உறுதி செய்தன. கருணை மனுக்கள், மறு ஆய்வு மற்றும் சீராய்வு மனுக்கள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் டெல்லி திஹார் சிறையில் நேற்று அதிகாலை 4 பேருக்கும் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.
தூக்குதண்டனை நிறைவேற்றப்பட்டவுடன் குற்றவாளிகள் 4 பேரின் உடல்களையும் 30 நிமிடங்கள் கயிற்றில் தொங்கவிட்டபின்பு இறக்கியதாக சிறை அதிகாரிகள் தெரிவித்தனர். திஹார் சிறை இயக்குநர் சந்தீப் கோயல் நிருபர்களிடம் கூறுகையில், “தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டு 30 நிமிடங்களுக்குப் பின் மருத்துவர் ஆய்வு செய்து, உயிர் பிரிந்து விட்டது என அறிவித்த பின் உடற்கூறு ஆய்வுக்கு எடுத்துச் சென்றோம்.
உடற்கூறு ஆய்வு முடிந்த பின் நான்கு பேரின் உடல்கள் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டன” எனத் தெரிவித்தார்.
திஹார் சிறையின் மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில், “குற்றவாளி முகேஷ் தூக்கிலிடுவதற்கு முன்பாக தனது உடல் உறுப்புகள் அனைத்தையும் தானமாக வழங்க வேண்டும் என்று சிறை கண்காணிப்பாளரிடம் கடைசியாகத் தெரிவித்தார்.
வினய் குமார் தூக்குத் தண்டனை நிறைவேற்றுவதற்கு முன், சிறையில் தான் வரைந்த ஓவியங்களில் அனுமன் மந்திரம் தொடர்பான ஓவியத்தை சிறைக் கண்காணிப்பாளருக்கும், மற்றொரு ஓவியத்தைத் தனது குடும்பத்தினருக்கும் வழங்க விரும்புகிறேன்” எனக் கடைசியாகத் தெரிவித்தார். மற்ற இரு கைதிகளான பவன் குப்தா, அக்சய் குமார் இருவரும் தங்களின் கடைசி ஆசைகளையும், வார்த்தைகளையும் பேசாமலேயே தூக்கு மேடைக்கு ஏறினர்” எனத் தெரிவித்தார். (ம)

## நிர்பயா வழக்கு

# நீதி நிலைநாட்டப்பட்டது என்று மோடி பெருமிதம்



புதுடெல்லி, மார்ச் 21
நிர்பயா கொலைக் குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை நேற்று நிறைவேற்றப்பட்ட நிலையில் நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது எனப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.
டெல்லியில் நிர்பயா என்ற மருத்துவ மாணவி கடந்த 2012ஆம் ஆண்டு ஓடும் பேருந்தில் வன்புணர்வு செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளிகள் முகேஷ் குமார் சிங், பவன் குமார் குப்தா, வினய் குமார் சர்மா, அக்ஷய் குமார் ஆகிய 4 பேருக்கும் மரண தண்டனை நேற்று நிறைவேற்றப்பட்டது. இது தொடர்பில் மோடி மேலும் தெரிவித்ததாவது:
“நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது. பெண்களின் கண்ணியத்தையும், பாதுகாப்பையும் உறுதி செய்வது மிகவும் முக்கியமான ஒன்று. எமது பெண்களின் சக்தி எல்லா துறைகளிலும் சிறப்பாக உள்ளது. பெண்களின் முன்னேற்றத்தை மேம்படுத்தும் சமத்துவம் மற்றும் சம வாய்ப்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் நாட்டை நாம் ஒன்றிணைந்து உருவாக்க வேண்டும்” என்று மோடி மேலும் தெரிவித்தார். (ம)

# கொரோனா வைரஸால் மீண்டெழும் ஆபிரிக்கா



ஜொகன்ஸ்பார்க், மார்ச் 21
கொரோனா வைரஸின் தாக்கம் ஒரு முனையில் மிகைப்பட்டிருந்தாலும், மறுமுனையில் ஆபிரிக்காவின் சுற்றுலா இந்தக் கொரோனா வைரஸால் மீண்டெழுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
கொரோனா வைரஸால் உலக அளவில் சுமார் 150 நாடுகள் கடும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள் ளன. ஐரோப்பிய, ஆசிய, தென்ன மரிக்க நாடுகளைக் கொரோனா பெரிதும் தாக்கியுள்ளது. எனினும் ஆபிரிக்க நாடுகளில் கொரோனாவின் தாக்கம் மிகமிகக் குறைவாகவே காணப்படுகின்றது.
எத்தியோப்பியா, சோமாலியா, மங்கோலியா, கென்யா, உகண்டா, மாலி, சூடான் ஆகிய நாடுகளில் கொரோனா விரல்விட்டு எண்ணும் வகையிலான தாக்கத்தைத்தான் செலுத்தியுள்ளது.
இதனால் ஐரோப்பாவுக்குப் பதில் அடுத்த ஒரு வருடத்தில் சுற்றுலாவிகள் ஆபிரிக்காவைத் தெரிவுசெய்வதற்கான வாய்ப்பு அதிகம். இதனால் ஆபிரிக்காவின் சுற்றுலாத் துறை மிகுந்த வளர்ச்சியடையும் என்று கருதப்படுகின்றது. (ம)



# உறங்கியது உலகம்!

உரோம், மார்ச் 21
கொரோனா வைரஸின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக உலகின் பல்வேறு நாடுகள் ஊரடங்கு உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளன.
இந்தியாவில் நாளை முழுவதும் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதேபோல் இத்தாலியின் பல மாகாணங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
ஈரானில் தலைநகர் தெஹ்ரோன் உள்ளிட்ட பகுதிகளிலும், அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்திலும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
ஐரோப்பாவைப் பொறுத்தவரை பிரான்ஸில் நைஸ் நகரில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பரிஸ் நகரில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்க பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. கனடாவிலும் பரவலாக ஊரங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஊரடங்கு வேளையில் மக்களின் பொருளாதாரத்தைத் தொடர்ந்து காக்கவும், கட்டியெழுப்பவும், அவர்களின் உணவுத் தேவையை நிவர்த்தி செய்யவும் அரசு முழுவதுமாகப் பொறுப்பேற்றுள்ளது. இதற்காக 83 மில்லியன் டொலர் பெறுமதியான திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. (ம)

# விரைவில் மீண்டு வருவோம்!

*ரவுஹானி நம்பிக்கை*

தெஹ்ரோன், மார்ச் 21
கொரோனாவின் பிடியில் இருந்து விரைவில் மீண்டு வருவோம் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார் ஈரானின் அதிபர் ஹசன் ரவுஹானி.
கொரோனாவால் ஈரான் மிகையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பத்து நிமிடத்துக்கும் ஒரு ஈரானியர் உயிரிழக்கின்றார் என்கின்றது புள்ளிவிவரம். இந்த நிலையில் நிலமையின் தீவிரத்தைக் கட்டுப்படுத்துவோம் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார் ரவுஹானி.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஈரானில் கொரோனா வைரஸ் பாதிப்பை ஒற்றுமையுடன் எதிர்கொண்டு மீண்டு வருவோம். சிரமங்களைத் தாண்டி இலக்குகளை அடைவோம். இந்த நெருக்கடியான நிலையில் மக்கள் ஓரணியில் நின்று எமக்கு ஆதரவை வழங்க வேண்டும். அரசு தெரிவிக்கும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். வீடுகளை விட்டு வெளியில் தேவையற்ற விதத்தில் மக்கள் வரவேண்டாம்- என்றார். (ம)



# கொரோனா பலி 11,000

பீஜிங், மார்ச் 21
கொரோனா வைரஸ் தாக்கத்தால் உலக அளவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 11 ஆயிரத்தைத் தாண்டியது.
டிசெம்பர் இறுதியில் சீனாவின் வுகான் மாகாணத்தில் இனங்காணப்பட்ட கொரோனா வைரஸ் நாளுக்குநாள் தீவிரமாகப் பரவி வருகின்றது. இந்த நோயால் அன்றாடம் பல நூறு மக்கள் பாதிக்கப்பட்டுக்கொண்டும், பல நூறு மக்கள் உயிரிழந்துகொண்டும் உள்ளனர்.
சீனாவுக்கு வெளியில் கொரோனாவின் தாக்கம் தற்போது மிகைப்பட்டுள்ளது. இத்தாலி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு கொரோனா பெரும் தலைவலியாக மாறியுள்ளது. இந்த நிலையில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 11 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. இத்தாலியில் மட்டும் 3 ஆயிரத்து 600 பேர் உயிரிழந்துள்ளனர். (ம)



கொரோனா வைரஸ் ஆசிய, ஐரோப்பிய நாடுகளைத் தொடர்ந்து தென்னமரிக்க நாடுகளிலும் வலுவாகத் தடம்பதிக்க ஆரம்பித்துள்ளது. இதனால் பொலிவிய - பெரு நாடுகளுக்கு இடையிலான எல்லை முழுவதும் மூடப்பட்டது. (ம)



# மகிழ்ச்சியானது பின்லாந்து

உலகில் மிகவும் மகிழ்ச்சியான நாடு என்ற பெயரை மூன்றாவது தடவையாகவும் வென்றுள்ளது பின்லாந்து.
உலக மகிழ்ச்சி அறிக்கைக்கான ஆய்வாளர்கள் சுமார் 156 நாட்களில் உள்ள மக்களிடம் தங்கள் மட்டத்தில் மகிழ்ச்சி என்றால் என்னவென்பது பற்றி சுயமதிப்பீடு செய்யுமாறு கோரியது. அதாவது ஜிடிபி, சமூக இணக்கம், ஆதரவு, தனிமனித சுதந்திரம், ஊழலின் அளவு ஆகியவற்றை அளவு கோலாகக் கொண்டு சுயமதிப்பீடு செய்யும்மாறு கோரப்பட்டது.
5.5 மில்லியன் மக்கள் தொகை கொண்ட பின்லாந்து நாடு தொடர்ச்சியாக 3ஆவது முறையாக உலகிலேயே மகிழ்ச்சியான நாடாக தேர்வாகியுள்ளது.
இத்தனைக்கு பிலாந்தின் மது அருந்துதல் பழக்கம் அதிகம், தற்கொலைகள் அதிகம் ஆனால் கடந்த 10 ஆண்டுகளாக அங்கு மேற்கொண்ட சுகாதார நடவடிக்கைகள் இந்தத் தீமைகளை வெகுவாகக் குறைத்துள்ளது என்கிறது இந்த ஆய்வு. (ம)

# நியூசிலாந்து வீரர்களுக்கு கட்டாயத் தனிமை!

ஆஸ்திரேலியாவில் இரு தரப்புத் தொடரில் பங்கேற்ற நியூசிலாந்து வீரர்கள் அனைவரும் 14 நாள்கள் கட்டாயத் தனிமையில் இருக்க வேண்டும் உத்தரவிடப்பட்டுள்ளது.

நியூசிலாந்து கிரிக்கெட் அணி சமீபத்தில் மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் விளையாடுவதற்காக ஆஸ்திரேலியா சென்றது. கொரோனா அச்சம் காரணமாக முதல் ஆட்டம் ரசிகர்கள் இன்றி நடத்தப்பட்டது. எஞ்சிய ஆட்டங்கள் கைவிடப்பட்டன. இதையடுத்து சொந்த மண் திரும்பிய நியூசிலாந்து வீரர்கள் அந்த நாட்டின் பிரதமர் ஜசிந்தாவின் உத்தரவுக்கு அமைய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ம)






# 10 பந்துப்பரிமாற்றமாக மாறுகின்றது ஐ.பி.எல்!

## ரசிகர்கள் இன்றி நடத்தவும் பரிசீலனை

இந்த வருட ஐ.பி.எல் தொடர் மூடிய மைதானத்துக்குள் 10 பந்துப்பரிமாற்றமாக நடத்தப்பட வாய்ப்புள்ளது என்று தகவல் வந்துள்ளது.

இந்த வருடத்துக்கான ஐ.பி.எல். தொடர் எதிர்வரும் 29ஆம் திகதி நடைபெறவிருந்தது. எனினும் கொரோனா பாதுகாப்பு ஏற்பாடுகள் காரணமாக தொடர் திகதி குறிப்பிடப்படாமல் பிற்போடப்பட்டது. இதையடுத்து ஐ.பி.எல் தொடர் நடைபெறுமா என்பது தொடர்பில் பெரும் கேள்விகள் எழுந்தன. தொடர் கைவிடப்படலாம் என்றும் பலர் கருத்துத் தெரிவித்திருந்தனர். இந்த நிலையில் மூடிய மைதானத்துக்குள் (ரசிகர்கள் இல்லாமல்) தொடரை 10 பந்துப்பரிமாற்றங்கள் கொண்டதாக நடத்தப் பரிசீலிக்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் கங்குலி, ஐ.பி.எல் தொடர் தொடர்பில் ஏப்ரல் 15ஆம் திகதிக்குப் பின்னரே உறுதியான முடிவுக்கு வரமுடியும் என்று கடந்த சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஹர்பஜன், சைமன்ஸ் மோதல் மிகமோசமே

## பொண்டிங் வெளிப்படை

ஹர்பஜன் சிங், சைமன்ஸ் இடையிலான வார்த்தை மோதல் எனது தலைமைத்துவத்தின் கீழ் நான் பெற்ற மிகமிக மோசமான அனுபவம் இவ்வாறு தெரிவித்துள்ளார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் பொண்டிங்.

அனில் கும்ளே தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி கடந்த 2008ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் செய்து 4 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இதில் சிட்னியில் நடந்த 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின்போது இந்திய சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங், ஆஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரர் சைமன்ஸை 'குரங்கு' என்று திட்டினார் என்று எழுந்த சர்ச்சை இனவெறிப் பிரச்சினையாக உருவெடுத்தது. இந்த விவகாரம் குறித்து விசாரணை நடத்திய ஐ.சி.சி ஹர்பஜன் சிங் 3 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடத் தடை விதித்தது.

இதனால் கோபமடைந்த இந்திய கிரிக்கெட் வாரியம் எஞ்சிய ஆட்டங்களில் இந்திய அணி விளையாடாமல் நாடு திரும்பும் என்று அறிவித்தது. இதையடுத்து ஹர்பஜன் மேன்முறையீடு செய்தார். பின்னர் அவருக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டதுடன் அந்த ஆட்டத்துக்கான கட்டணத்தில் 50 சதவீதம் தண்டமாக விதிக்கப்பட்டது. இதன் காரணமாக சமரசம் அடைந்த இந்திய அணி தொடர்ந்து விளையாடியது. இந்த தொடரை ஆஸ்திரேலிய அணி 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்த நிலையில் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் பொண்டிங் தனது தலைமைத்துவத்தில் நடந்த மோசமான அனுபவம் தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

சைமன்ஸை குரங்கு என்று ஹர்பஜன் சிங் திட்டியதால் எழுந்த இனவெறிச் சர்ச்சை எனது தலைமைத்துவத்தில் மிகவும் மோசமான தருணமாகும். 2005ஆம் ஆண்டு நடந்த இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடர் தோல்வி ஜீரணிக்க முடியாத ஒன்றாகும். இருப்பினும் அந்தத் தொடர் எனது கட்டுப்பாட்டில் இருந்தது. ஆனால் குரங்கு சர்ச்சை விவகாரத்தில் என்னால் எதையும் கட்டுப்படுத்த முடியவில்லை. அது ஒரு மோசமான தருணம். அந்த சம்பவம் குறித்து நீண்ட நாட்களுக்கு பேசப்பட்டது. இந்த பிரச்சினை காரணமாக அடுத்த டெஸ்ட் போட்டியில் எங்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. அடுத்து பெர்த்தில் நடந்த டெஸ்ட் போட்டியில் நாங்கள் வெற்றி பெறுவோம் என்று எதிர்பார்த்தோம். ஆனால் முடிவில் நாங்கள் தோல்வியைச் சந்தித்தோம். அந்த தோல்விக்கு பிறகு சில நாட்கள் இன்னும் மோசமாகி கொண்டே போனது - என்றார். (ம)



# தொடர் கைவிடப்பட்டமைக்காக பி.சி.சி.ஐக்கு மிக்க நன்றிகள்!

## தெரிவித்தது தெ.ஆபிரிக்கா



இந்தியா - தென்னாபிரிக்கத் தொடரைக் கைவிட்டு வீரர்களை உடனடியாகத் தாயகம் திரும்ப அனுமதித்த இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம் இவ்வாறு தெரிவித்துள்ளது தென்னாபிரிக்கா.

இது தொடர்பில் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

எங்களது வீரர்களை உடனடியாக சொந்த நாடு திரும்புவதற்கு அனுமதித்த பிசிசிஐக்கு நன்றி சொல்ல விரும்புகின்றோம். இந்த முடிவை எடுப்பது எளிதானது அல்ல. இதனால் இந்தியாவுக்கு மிகப்பெரிய நிதி இழப்பு ஏற்பட்டிருக்கும். கடினமான நேரத்தை அவர்கள் புரிந்து கொண்டதற்காக நாங்கள் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம் என்றுள்ளது. (ம)



# பானர்ஜி மறைவு!

இந்திய கால்பந்து லெஜண்ட் பி.கே. பானர்ஜி கொல்கத்தாவில் நேற்றுக் காலமானார். அவருக்கு வயது 83. அவர் நீண்ட காலம் நோய்வாய்ப்பட்டிருந்தார் என்று அவரின் குடும்பத்தினர் தெரிவித்தனர். (ம)

## கொரோனா அச்சத்தால்

# அத்தியாவசிய பொருள்களை வாங்கிக் குவிக்க வேண்டாம்!

## ஸ்ரெய்ன் அறிவுறுத்தல்




கொரோனா அச்சுறுத்தல் என்ற பெயரில் பொதுமக்கள் அத்தியாவசியப் பொருள்களை வாங்கிக் குவிக்க வேண்டாம் என்று கோரிக்கை விடுத்துள்ளார் தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரெய்ன்.

இது தொடர்பில் ஸ்ரெய்ன் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா அச்சம் என்ற பெயரில் அத்தியாவசிய பொருட்களை மொத்தமாக வாங்கி வைப்பது சரியான வழி அல்ல என்பதை நாம் முடிவு செய்ய வேண்டும். அனைவருக்கும் தேவையான பொருட்களை இப்படி வாங்குவது நியாயம் அல்ல. நான் அருகில் உள்ள மளிகை கடைக்கு சென்றிருந்தேன். அங்கு அனைவரும் டொய்லெட் பேப்பர்களை வாங்கிச் சென்றனர். நமக்கு என்ன வேண்டுமோ? அதை மட்டும் வாங்க வேண்டும். எல்லாமே அவசியம் என்று நாம் கருதக்கூடாது என்றார்" என்றார். (ம)

இந்தப் பத்திரிகை 361, கஸ்தூரியார் வீதியில் உள்ள நியூ உதயன் பப்ளிகேசன் பிறைவெட் நிறுவனத்தால் 21.03.2020 அன்று வெளியிடப்பட்டது.